பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 09 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலியில் முக்கிய பங்கு வகிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.
3. விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள 5 ஆயிரம் நீர்நிலைகளை சீரமைக்க 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
5. தெற்காசிய ஜூனியர் தடகள போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலியில் முக்கிய பங்கு வகிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது என பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

நொய்டாவில் இன்று தொடங்க உள்ள செமிகான் இந்தியா உச்சிமாநாட்டையொட்டி அத்துறை சார்ந்த தொழில்துறை தலைவர்களுடன் தமது இல்லத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் பேசினார்.

டிஜிட்டல் யுகத்தின் அடிப்படையாக செமிகண்டக்டர் திகழ்வதாக அவர் கூறினார்.

தொழில்நுட்பம் மனித குலத்தின் நலனுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

புதுமை கண்டுபிடிப்புகளையும், உற்பத்தியையும் ஊக்குவிக்க சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொழில்துறையினருக்குத் தேவையான திறன் மேம்பாட்டிலும் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

உயர் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்ய இந்தியா சிறந்த சந்தையாக திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

நிலையான மற்றும் தொழில் துறையினருக்கு ஆதரவான கொள்கைகளை மத்திய அரசு பின்பற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகத்தின் தேவையை பூர்த்தி செய்ய இந்தியாவில் உற்பத்தி செய்வோம் என்ற கொள்கையுடன் அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

தொழில் துறையினருக்கான அரசின் ஆதரவு தொடரும் என்று திரு நரேந்திரமோடி உறுதியளித்தார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற செமிகண்டக்டர் தொழில்துறையினர் மத்திய அரசின் அரசின் செயல்திட்டங்களை வரவேற்பதாக தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மது விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு செயல்படுவதாக குற்றம்சாட்டினார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) -39---- செகண்ட்*

**[]<<<>>>[]**

சமூக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் ஊடகத்துறை முக்கிய பங்காற்றுவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஆறு நாள் பயணமாக சென்னை வந்துள்ள அஸ்ஸாம் ஊடகக் குழுவினர் ஆளுநர் மாளிகையில், நேற்று ஆளுநரை சந்தித்து பேசினர்.

அப்போது பேசிய ஆளுநர், கலாச்சார இடைவெளிகளை நிரப்புவதில் உள்ளூர் ஊடகங்கள் முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்தார்.

வலுவான இந்தியாவை உருவாக்க மாநிலங்களுக்கு இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் கூறினார்.

குவாஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி தொடர்பான பட்டயப்படிப்பு தொடங்கப்பட உள்ளதாக திரு ஆர் என் ரவி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள நிதியை நிபந்தனைகள் இன்றி விடுவிக்க வேண்டுமென மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யமொழி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறிய கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதைத் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய பல்வேறு அம்சங்களை தமிழக அரசு ஏற்கனவே செயல்படுத்தி வருவதாக அவர் கூறியுள்ளார்.

மும்மொழிக் கொள்கை போன்ற குறிப்பிட்ட சில அம்சங்களை மட்டுமே ஆட்சேபிப்பதாக திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை சீரமைக்க 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 22 ஆயிரத்து 51 சிறு பாசன ஏரிகளில் முதல்கட்டமாக ஐயாயிரம் ஏரிகளை சீரமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீர்நிலைகளின் கொள்திறன் அதிகரிப்பதுடன், நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இப்பணிகள் தேவைக்கேற்ப மகாத்மாகாந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யப்படும்போது இணை இடு பொருட்களை வாங்குமாறு கட்டாயப்படுத்தக்கூடாது என கேட்டுக் கொண்டார்.

இதனை மீறும் உர விற்பனையாளர்கள் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.

யூரியா. டி ஏ பி, பொட்டாஷ் உள்ளிட்ட உரங்களின் கையிருப்பு குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டதாகவும், அனைத்து மாவட்டங்களிலும் போதுமான அளவு இவை இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

தமிழகத்தில் விளையாட்டுத் துறைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில இளைஞர் நலன் மற்றும் விளயைாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

ராமநாதபுரத்தில் 874 ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநில அரசின் நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச மற்றும் தேசிய போட்டிகளில் பதக்கம் வெல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றார்.

விளையாட்டுத்துறையின் வளர்ச்சி நகரங்களோடு நின்றுவிடக்கூடாது என்ற நோக்கில், கிராமப்புறங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் சூரியசக்தி செல் உற்பத்தியில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் முன்னணியில் திகழும் என்று ஆட்சியர் திரு கார்த்திகேயன் கூறியுள்ளார்.

நெல்லையில் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு புத்தாக்க நிறுவனமும் இணைந்து நடத்திய புத்தொழில் மாநட்டில் பேசிய அவர், தொழில்

முனைவோர் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

*( சவுண்ட்பைட் - கார்த்திகேயன் ) ----48 செகண்ட்*

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் திரு டொனால்டு டிரம்ப், திருமதி கமலா ஹாரிஸ் இடையேயான நேரடி விவாதம் தற்போது நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

வியட்நாமைத் தாக்கிய யகி புயலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 146-ஆக அதிகரித்துள்ளது.

**[]<<<>>>[]**

எஃகு துறையில் பசுமை செயல் திட்டங்கள் தொடர்பான அறிக்கையை மத்திய எஃகுத் துறை அமைச்சர் திரு ஹெச்.டி. குமாரசாமி நேற்று புதுதில்லியில் வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான ஆறு புதிய இணையதளங்களை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு புதுத்திலியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டை முன்னிட்டு புதிய திட்டங்களை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜிவ் ரஞ்சன் சிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

வரும் ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்திலிருந்து 15 விரைவு ரயில்களில் முன்பதிவு இல்லாத பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் சென்னையில் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உள்ளாட்சி பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போது மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் வட்டம் ஆனைமடுகு பகுதியில் விநாயகர் சிலைகளை கரைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

சென்னையில் கூடுதலாக மூன்று பன்னடுக்க வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்று மேயர் திருமதி பிரியா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சென்னையில் போக்குவரத்து விதி மீறலில் ஈடுபடும் நபர்களிடம் யுபிஐ க்யூஆர் குறியீட்டின் மூலம் அபராத கட்டணத்தை வசூலிக்கும் வசதி ஏற்படுத்தபடுவதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டி சென்னை நேரு விளையாட்டு அரங்கில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பூடான், பங்களாதேஷ், நேபாளம், மாலத்தீவுகள் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

தேசிய தர வரிசை டேபிள் டென்னிஸ் போட்டி ஹிமாச்சலப் பிரதேசத்தின் காங்க்ராவில் இன்று தொடங்குகிறது.

12 பிரிவுகளில் நடைபெறும் இப்போட்டியில் 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 300 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

***End of News***